| விண்ணப்பதாரர் புகைப்படம் சுய சான்றொப்பம் இடவும் |
|---|

# மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, ஈரோடு

## காணாமல் போன குழந்தைகளுக்காக காவல் நிலையங்களில் சட்ட தன்னார்வலர்களை நியமிப்பதற்கான திட்ட விண்ணப்ப படிவம்

| | | | |
|---|---|---|---|
| 1 | விண்ணப்பதாரரின் பெயர் | : | |
| 2 | தகப்பனார்/கணவர் பெயர் | : | |
| 3 | பிறந்த தேதி மற்றும் வயது | : | |
| 4 | பாலினம் | : | |
| 5 | கல்வி மற்றும் தொழில் நுட்பத் தகுதி (உரிய சான்றிதழ்களின் நகல்களை இணைக்கவும்) | : | |
| 6 | நிரந்தர முகவரி | : | |
| 7. | தொலைபேசி எண்: | : | |
| 8. | மின்னஞ்சல் (Email) | : | |
| 9 | காவல்துறையில் வழக்கு எதுவும் நிலுவையில் இருந்தால்? அதன் விவரம் | : | |
| 10 | இதற்கு முன் சட்ட தன்னார்வலராக சேவை செய்த அனுபவம் உள்ளதா?<br>ஆம் எனில் அதன் விவரம்<br><br>(வேறு ஏதாவது சேவை அனுபவம் இருந்தால் அதன் விவரம்) | : | |

தன்னார்வ சட்டப்பணியாளர்களுக்கான கடமை சேவை மட்டுமே, உத்தியோகம் இல்லை, இந்த பணி முற்றிலும் தற்காலிகமானது மற்றும் அதற்கு அடிப்படை ஊதியம் எதுவும் இல்லை. சேவைக்கு தகுந்த கௌரவ ஊதியம் மட்டுமே அளிக்கப்படும் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்

## பத்திரிக்கை செய்தி

## "மாண்புமிகு ஈரோடு முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி.S. சமீனா அவர்களால் வெளியிடப்படும் மறு செய்தி அறிக்கை

ஈரோடு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவானது காணாமல் போன குழந்தைகளுக்காக காவல் நிலையங்களில் தன்னார்வ சட்டப்பணியாளார்களை நியமிப்பதற்கான திட்டத்தின் கீழ் சேவை புரிய விருப்பமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்கிறது.

ஈரோடு, பவானி, பெருந்துறை, கோபிசெட்டிபாளையம், சத்தியமங்கலம், அந்தியூர், கொடுமுடி மற்றும் மொடக்குறிச்சி @ எழுமாத்தூர் ஆகிய எல்லைக்குட்பட்ட காவல் நிலையத்திற்கு சட்ட தன்னார்வலர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

மேற்படி தன்னார்வ சட்டப்பணியாளர் பணியானது காணாமல் போன குழந்தைகள் தொடர்பான புகார்களை உடனடியாக பதிவு செய்து விரைவான தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சட்ட மற்றும் மனநல ஆதரவு வழங்குவது ஆகும். இப்பணி முற்றிலும் தற்காலிகமானது. இப்பணிக்கு அடிப்படை ஊதியம் மற்றும் படிகள் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. பணிபுரியும் நாட்களுக்கு மட்டுமே கௌரவ ஊதியம் வழங்கப்படும்.

இப்பணிக்கு விண்ணப்பிப்பவர்கள் 25 வயது முதல் 65 வயதுடையவராக இருத்தல் வேண்டும். குறைந்தது 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் , அரசியல் சாராத சேவை சார்ந்த தொண்டு நிறுவனங்கள், மருத்துவம் மற்றும் உளவியல் துறை சார்ந்தவர்கள் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

மேற்படி முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் எதிர்வரும் **15.06.2026** அன்று மாலை 5.00 மணிக்குள் நேரிடையாகவோ, அஞ்சல் மூலமாகவோ, அல்லது இணையவழி வாயிலாகவோ (email id: dlsaerode1@gmail.com) கிடைக்கப்பெற வேண்டிய முகவரி: தலைவர் அவர்கள்,

ஈரோடு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, ADR கட்டிடம், ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், ஈரோடு – 638011. செல்:0424-2902105.

காணாமல் போன குழந்தைகளுக்காக காவல் நிலையங்களில் தன்னார்வ சட்டப்பணியாளார்களை நியமிப்பதற்கான திட்டத்தின் கீழ் சேவை புரிய விருப்பமுள்ளவர்கள் மேற்படி விண்ணப்பத்தினை ஈரோடு மாவட்ட நீதிமன்றத்தின் பின்வரும் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளவும். (https://erode.dcourts.gov.in/ ).

மேலும் பெறப்பட்ட தகுதியான விண்ணப்பதாரர்களுக்கான நேர்காணல் 19.06.2026 அன்று மேற்குறிப்பிட்ட முகவரியில் காலை 10.30 மணிக்கு நடைபெறும்.

**(Sd/-Tmt.S. SAMEENA)**
தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
ஈரோடு

**பெறுநர்:**

1. மக்கள் தொடர்பு அலுவலர்,
   மக்கள் தொடர்பு அலுவலகம், ஈரோடு
2. ஆசிரியர், தினந்தந்தி, ஈரோடு
3. ஆசிரியர், தினமலர், ஈரோடு
4. ஆசிரியர், தினகரன், ஈரோடு
5. ஆசிரியர், தினமணி, ஈரோடு
6. ஆசிரியர், Indian Express, ஈரோடு
7. ஆசிரியர், தி இந்து (ஆங்கிலம்), ஈரோடு
8. ஆசிரியர், தி இந்து (தமிழ்), ஈரோடு
9. ஆசிரியர், மாலை முரசு, ஈரோடு
10. ஆசிரியர், தமிழ்முரசு, ஈரோடு
11. ஆசிரியர், மாலைமலர், ஈரோடு